வெளி நாடுகளுக்கு தூதர்கள்.

*240 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1963, 1969, 1970–ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு, தமிழர்களை தமிழர்கள் வாழும் வெளி நாடுகளில் தூதர்களாக நியமிக்க வேண்டும் என மத்திய அரசிடம் வேண்டுகோள் ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

பொது நூலகங்கள்.

*241 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொது நூலகங்களின் பணிகளை மட்டும் முழுக்க முழுக்க கவனிக்க தனி இயக்குநர் நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இப் பதவிக்கு அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

*242 வினா—திரு கா. காளிமுத்து : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்போது முகவை மாவட்டத்திலுள்ள நூலகங்கள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இருநூற்றி ஏழு.

*243 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 28–4–1969–ல் நடந்த வடார்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், அம் மாவட்டத்தில் நடமாடும் நூல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.